


# மனிதர்க்குச் சோறிட... மண்ணுயிர் காப்போம்!

## திராவிட மாடல் அரசு

73

'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....

**வே**ளாண்மைக்கு மண்ணே ஆதாரம். நிலத்தில் விதைக்கப்படுகிற விதைகளுக்குப் போதிய ஊட்டச்சத்தை வழங்குவது மண்தான். அந்த மண், வளமாக இருந்தால்தான் அதில் விளையும் பயிரும் வளமாக இருக்கும். ஒரு காலத்தில் விவசாயம்தான் பெரிய அளவிலான வேலையாக இருந்தது. இன்று உள்ளது போல வலிந்து புகுத்தப்படும் 'இயற்கை வேளாண்மை' என்ற விஷயங்கள் அன்றைக்கு இருக்கவில்லை. காரணம், விவசாயத்தை மக்கள் இயற்கையான முறையிலேயே மேற்கொண்டு வந்தார்கள். எனவே, அன்று மண் வளமாக இருந்தது.

ஒரு கட்டத்தில் மழை பொய்க்க, பஞ்சம் தலைவிரித்தாட, நவீன அறிவியலின் துணை கொண்டு 'பசுமைப் புரட்சி' போன்ற விஷயங்கள் முன்னெடுக்கப்பட்டன. ரசாயன உரங்கள் உள்ளிட்ட இடுபொருட்களை, மருந்து போல பயன்படுத்த வேண்டும் என்றுதான் நவீன வேளாண் விஞ்ஞானிகள் அறிவுறுத்தினர். அதன் காரணமாக, உணவு உற்பத்தியில் தன்னிறைவை அடைந்தோம்.

ஆனால், நவீன வேளாண் அறிவியலால் ஏற்பட்ட பக்கவிளைவு, மனிதப் பேராசை. அதனால் அதிக அளவில் ரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள், ஒற்றைப் பயிர்ச் சாகுபடி, பணப் பயிர்களுக்கு முன்னுரிமை கொடுத்தது போன்ற நடவடிக்கைகள் பரவலாகின. இது பொன் முட்டையிடும் வாத்தை அறுப்பதாக அமைந்தது. அதனால் விரைவிலேயே, மண் தனது வளத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக இழக்கத் தொடங்கியது.

மனிதர்கள் சுதாரித்துக்கொள்வதற்குள் மண் தனது பெருமளவு வளத்தை இழக்க, அதனுடன் சேர்ந்து பருவநிலை மாற்றங்களும் விவசாயத்தின் மீது தாக்கம் செலுத்தத் தொடங்கின. அதிலிருந்து தப்பிக்க இன்று 'இயற்கை வேளாண்மை' என்ற பெயரில் பல விஷயங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் ஒரு சில விஷயங்கள் திரும்பத் திரும்ப வலிந்து செய்ய வேண்டியவையாக உள்ளன. அவற்றுக்கு மட்டுமே அதிக முக்கியத்துவமும் கிடைக்கின்றன. அதற்குப் பின்னுள்ள வியாபார நோக்கங்களை எழுத பக்கங்கள் போதாது.

இப்படியான சூழலில், நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான **'திராவிட மாடல் அரசு', 'இயற்கை வேளாண்மை'** என்பதை 'ஹோலிஸ்டிக்', அதாவது முழுமையான முறையில் உள்வாங்கிக் கொண்டு செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது. அதன் பலன்தான், 'முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்' எனும் திட்டம்.

### மண்ணைக் காக்கும் 22 திட்டங்கள் என்ன?

1) பசுந்தாள் உரப் பயன்பாடு
2) மண்புழு உரப் பயன்பாடு
3) மண்வள அட்டை
4) அமில நிலங்களைச் சீர்படுத்துதல்
5) திரவ உயிர் உரப் பயன்பாடு
6) வயல் சூழல் ஆய்வு
7) இலவச வேப்ப மரக்கன்று விநியோகம்
8) இயற்கை உயிரிப் பூச்சிக்கொல்லிப் பரவலாக்கம்
9) பாரம்பரிய நெல் ரகங்கள் சாகுபடி
10) மரபுசார் விதைகள் விநியோகம்
11) பாரம்பரிய சிறுதானிய விதைகள் உற்பத்தி
12) இயற்கை வேளாண்மை மாதிரிப் பண்ணை உருவாக்கம்
13) உயிர்ம வேளாண் சான்றுடன் கூடிய பொருட்களைச் சந்தைப்படுத்துதல்
14) 100 இயற்கை இடுபொருள் தயாரிப்பு மையம்
15) உயர்த் தொழில்நுட்ப நாற்றங்கால்கள் உற்பத்தி மையம்
16) கால்நடைகள் அடங்கிய ஒருங்கிணைந்த பண்ணையத் தொகுப்பு ஏற்படுத்துதல்
17) மானாவாரி நிலங்களில் சாகுபடி செய்ய விதைகள் விநியோகம்
18) வீட்டுத் தோட்டம் ஊக்குவிப்புத் திட்டம்
19) தேனீ முனையம் உருவாக்கம்
20) சிறப்பு வேளாண் கிராமங்கள் உருவாக்கம்
21) நுண்ணுயிர்க் கலவைத் தயாரிப்பு மையம்
22) 100 உழவர் அங்காடிகள் ஏற்படுத்துதல்

### ரூ.206 கோடியில் 22 திட்டங்கள்

வேளாண் துறைக்காகத் தனி நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்யும் ஒரே மாநிலம், முதல் மாநிலம் தமிழ்நாடு மட்டும்தான். அதுவும் நம் 'திராவிட மாடல்' ஆட்சியில்தான் செயல்படுத்தப்படுகிறது. 2024-2025 ஆம் ஆண்டுக்கான அந்த வேளாண் நிதிநிலை அறிக்கையில், இந்தத் திட்டம் குறித்த அறிவிப்பு வெளியானது. 'மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்' என்ற மாபெரும் திட்டத்தின் கீழ், 22 சின்னச் சின்ன திட்டங்களும் அடங்குகின்றன. அவற்றைச் செயல்படுத்துவதற்காக 206 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்த 22 திட்டங்களில் முதல் திட்டம், 'பசுந்தாள் உரப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் திட்டம்' ஆகும். மண்ணில் நைட்ரஜன், கார்பன், பொட்டாசியம் உள்ளிட்ட அனைத்துச் சத்துகளும் சரிவிகிதத்தில் இருந்தால்தான் நுண்ணுயிர்கள் பெருகி, பயிர்களுக்கு ஊட்டச்சத்துகள் எளிதாகக் கிடைக்கும். மகசூலும் அதிகரிக்கும். அதற்காக, பசுந்தாள் உர உபயோகத்தினை உழவர் பெருமக்களிடையே ஊக்குவிக்க, ஆயக்கட்டு, இறவைப் பாசனப் பகுதிகளில் முதற்கட்டமாக 2 இலட்சம் ஏக்கரில் பசுந்தாள் உரம் பயிரிட முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாநிலத்தில் உள்ள சுமார் 2 இலட்சம் விவசாயிகள் பயனடைவர். இந்தத் திட்டம்தான் கடந்த 12-ஆம் தேதி முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டது.

### விவசாயிகளின் நண்பர்களைப் பெருக்க...

'திராவிட மாடல்' அரசின் 'மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்' திட்டத்தின் முதல் மூன்று திட்டங்கள் மிக முக்கியமானவை. காரணம் இவற்றில், இயற்கை, நவீன அறிவியல் விஷயங்கள் அடங்கியுள்ளன. உயர்திணை, அஃறிணை, தொழில்நுட்பம் ஆகிய மூன்றும்தான் அந்தச் சேர்க்கை. மண்ணுக்குச் சரிவிகித சத்துகளை ஊட்ட பசுந்தாள் உரம் பயன்படுத்த வேண்டும். அதை விவசாயிகள்தான் செய்யமுடியும். எனவே, அது உயர்திணை.

அடுத்தபடியாக, விளையும் நிலத்துக்கு எரு இடாவிட்டால், விளைச்சல் கிடைக்காது. எனவே, மாட்டுச் சாணம், வேளாண் கழிவுகள் உள்ளிட்டவற்றை மட்கச் செய்து, அதிலிருந்து கிடைக்கும் மண்புழு உரத்தைப் பயன்படுத்தினால், மண், வளம் வலுப்பெறும். ஆகவேதான் மண்புழுவை **'விவசாயிகள் நண்பன்'** என்று அழைக்கிறார்கள். இதற்காக, ஒரு விவசாயிக்கு இரண்டு மண்புழு உரப்படுக்கைகள் வீதம் 10 ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கவுள்ளது அரசு. மேலும் நிரந்தர மண்புழு உரத் தொட்டிகளை அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மண் புழுக்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தல் மட்டுமே மனிதர் வேலை. மண்ணை மண்புழுவே வளப்படுத்திக் கொள்ளும். எனவே, அது அஃறிணை.

**விவசாயச் சட்டங்கள் மூலம் சோற்றில் மண் அள்ளிப் போடும் சர்வாதிகாரிகள் இருக்கும் பூமியில், 'திராவிட மாடல் அரசு' மண்ணில் 'பொன்' அள்ளிப் போடுகிறது.**

### அட்டை தரும் வளம்!

விவசாயிகளின் ரத்தம் உறியும் அட்டைகள் குறித்து, நாம் கேள்விப்பட்டிருப்போம். ஆனால், இந்த அட்டை விவசாயிகளுக்கு வளம் தரும். ஆம்... அதுதான் 'மண்வள அட்டை'. இதை 'தமிழ் மண்வளம்' இணையதளம் வழியாகப் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும். இவ்வாறு மண்வளம் காப்பதில் நவீனத் தொழில்நுட்பமும் அடங்கியுள்ளது.

இதற்காக, தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் மண் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டு, சமச்சீர் உரப் பரிந்துரை, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை ஆகியவை குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்தப் படும். 2024-2025-ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 482 கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்ட கிராமப் பஞ்சாயத்துகளில் 2 இலட்சம் விவசாயிகளின் நிலத்தில் மண் பரிசோதனை செய்து மண்வள அட்டையும், மண்வள மேம்பாட்டுக்கான பரிந்துரையும் வழங்கப்பட உள்ளன.

விவசாயச் சட்டங்கள் மூலம் சோற்றில் மண் அள்ளிப் போடும் சர்வாதிகாரிகள் இருக்கும் பூமியில், 'திராவிட மாடல் அரசு' மண்ணில் 'பொன்' அள்ளிப் போடுகிறது. இதனால் தமிழ்நாடு பொன் விளையும் நிலமாகும். மனமும் வயிறும் நிறையும்!

...சாதனை தொடரும்

### பிரிவினைகளைத் திட்டமிடும் சங்கி ஜனநாயகம்!

**கா**ஷ்மீருக்கு வழங்கப்பட்டிருந்த சிறப்புத் தகுதியை முந்தைய ஆட்சியில், மோடி அரசு ரத்து செய்தது. அதற்கு அவர்கள் சொன்ன காரணம், காஷ்மீரில் இந்தியர்கள் யாரும் ஒரு துண்டு இடத்தையும் வாங்க இயலாது. இனி, இந்தியர்கள் எல்லோரும் அங்கே இடத்தை வாங்கி மாளிகை கட்டலாம் என்றனர்.

ஒரே நாடு, ஒரே சட்டம், எல்லோருக்கும் ஜனநாயக உரிமை என கதை அளந்தனர். ஆனால், மாற்று மதத்தினருக்கு அரசே இடம் ஒதுக்கினாலும், அவர்களை சாதி, மதத்தின் பெயரால் குடியேறாமல் தடுப்பதுதான், இவர்களது 'சங்கி ஜனநாயகம்'. இது தொடர்பான ஒரு பதிவினைப் பதிவிட்டுள்ளார் பத்திரிகையாளர் விஜயஷங்கர்.

"குஜராத்தின் வடோதராவிலிருக்கும் ஹர்னி என்கிற இடத்தில் முதலமைச்சர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் ஆறு ஆண்டுகளுக்கு முன் ஒரு முஸ்லிம் பெண்ணுக்கு ஒரு வீடு ஒதுக்கப்பட்டது. ஆனால், அவர் இங்கு இதுவரை குடியேற முடியவில்லை. அதற்கு, அங்கு வாழும் இந்துக்களின் எதிர்ப்புதான் காரணம். கலவரப் பகுதிகள் சட்டத்தின் கீழ் ஒரு மதத்தைச் சேர்ந்தவர்கள், வேறொரு மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அனுமதியின்றி, விற்க முடியாது. இச்சட்டத்தின் காரணமாக சிறுபான்மையினருக்கு வீடுகள் ஒதுக்கமுடியாது என்று, வியாக்கியானம் செய்யும் ஹர்னி நகரில் வாழும் இந்துக்கள், சமீபத்தில் ஒரு ஆர்ப்பாட்டத்தையும் நடத்தியிருக்கின்றனர். வாழ்விடங்களில் இந்து-முஸ்லிம் பிரிவினை, குஜராத் படுகொலைகளுக்குப் பின் திட்டமிட்டு நடத்தப்பட்டது. அதற்குக் காரணமாக இருந்த 'ஏலியன்' இன்று பிரதமராக இருக்கிறார் என்பதுதான் கொடுமை".

### :ப்ளாஷ்பேக்



#### சுயமரியாதை இணையேற்பு விழா!



அ.கருணாநிதி

**அ**ன்றைய வட ஆற்காடு மாவட்டம், இன்றைய திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த மொழிப்போர் தியாகி மு.அய்யாகண்ணுவின் மகனான எனக்கு, தமிழ்ச்செல்வியுடன் 1983-ஆம் ஆண்டு மார்ச் 31 அன்று சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. அப்போதைய, இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத்தலைவர் அவர்கள் எங்கள் இணையேற்பு விழாவைத் தலைமையேற்று நடத்தி வைத்தார். இந்த விழாவில் கழக முன்னோடிகள் எஸ்.முருகையன் எம்.பி., பெ.சு.திருவேங்கடம் எம்.எல்.ஏ., த.வேணுகோபால் எம்.எல்.ஏ. வருகை தந்து வாழ்த்தியது, இன்றைக்கும் மனதைவிட்டு அகலாமல் மனதில் பதிந்திருக்கிறது.

– அ.கருணாநிதி,
போளூர், திருவண்ணாமலை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்


#### முதல் மாநாடு 5 நாடகங்கள்!

1950-ஆம் ஆண்டு கழகத்தின் முதல் மாநில மாநாடு நான்கு நாட்கள் நடைபெற்றது. முதல் நாளில் இரண்டு நாடகங்கள் நடைபெற்றன. முற்றிலும் இயக்கப் பெண்களாக நடிக்கும் 'போராட்டம்' எனும் நாடகம் நடைபெற்றது. அதற்கடுத்து, 'குலமுலேனி பில்லா'எனும் தெலுங்கு நாடகத்தினை ஆந்திர நண்பர்கள் நடத்தினர். இரண்டாவது நாள் கலைஞரின் 'இளைஞன் குரல்' நாடகமும், மூன்றாவது நாள் கே.ஆர்.ராமசாமி நடித்த 'ஜமீன் மாளிகை' நாடகமும், மாநாட்டின் இறுதி நாள் அறிஞர் அண்ணா எழுதிய 'சந்திரோதயம்' நாடகம் நீண்ட நாட்களுக்கு பின் மேடை ஏறியது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

511

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131